Impact Factor (SJIF): 6.092 E-ISSN: 2583-1615

International Journal of Research in Academic World

**Received**: 18/February/2023 **IJRAW:** 2023; 2(3):52-56 **Accepted:** 24/March/2023

# சைவசித்தாந்த சண்ட மாருதம் சூளை. சோமசுந்தர நாயகர் [1846-1901]

**[*1]N Praburam**

[*1]Department of Tamil, Government Arts College, Bharathiyar University, Coimbatore, Tamil Nadu, India.

**சுருக்கம்**

தமிழ் நிலம் சார்ந்த பழமையான சமயங்களாக அறியப்படுவன சிவ பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவம் என்னும் சைவசித்தாந்தமும், திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைணவம் என்னும் மாலியமும் ஆகும். சற்றேறத்தாழப் பக்தி இயக்கக் காலம் முதல் இக்காலம் வரையில் சைவ மற்றும் வைணவ சமய அடியார்கள் இடையே ஒரு மோதல் போக்கு நிலவி வருவதை நாம் அறிகிறோம். பதினான்காம் நூற்றாண்டில் தமிழகத்தைக் கைப்பற்றிய விசயநகரப் பேரரசினால் தமிழ்நாட்டில் ஆதிசங்கரர் வழிவந்த சங்கர வேதாந்திகள் செல்வாக்குப் பெற்றனர். மெய்யியல் தளத்தில் சங்கர வேதாந்திகளுக்கும் சைவ சித்தாந்திகளுக்கும் மெய்யியல் கருத்துகளில் முரண்பாடுகளும் அதன் காரணமாக மோதல்களும் தோன்றின. சைவர்களுக்கு எதிராக வைணவர்களும், சங்கர வேதாந்திகளும் செயல்பட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையிலான சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் மேலானக் காலம் இவர்களுக்கு இடையேயான இந்த மோதல் மிகவும் உச்சத்தில் இருந்தது. இந்தக் காலப் பகுதியில்தான் சென்னையிலுள்ள சூளை எனும் பகுதியில் பிறந்து தமிழ் உள்ளிட்ட நான்கு மொழிகளில் பெரும் புலமை பெற்று விளங்கிய, 'சைவசித்தாந்த சண்டமாருதம்' என்று சேதுபதி மன்னர்களாலும், 'பரசமயக் கோளரி' என்று திருவாவடுதுறை ஆதீனத் தலைவராலும் போற்றப்பட்ட சூளை.சோமசுந்தர நாயகர் வாழ்ந்தார். வைணவர்களுடனும், சங்கர வேதாந்திகளுடனும் சொற்சமராடி சைவசித்தாந்த மெய்யியலை நிலைநாட்டியவர் சோமசுந்தர நாயகர். சைவசித்தாந்த மெய்யியலுக்கு அரும்பணியாற்றிய ஜே.எம்.நல்லசாமிபிள்ளை, தமிழ்க்கடல் மறைமலையடிகள், தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார் உள்ளிட்ட பேராளுமைகளுக்கெல்லாம் ஆசிரியராக விளங்கியவர் சோமசுந்தர நாயகர். வைதீக சமயத்தை முன்னெடுத்து இந்தியா மட்டுமல்லாது அமெரிக்கா உள்ளிட்ட பல மேலை நாடுகளிலும் பரப்புரை செய்துவந்த வங்கத்து விவேகானந்தருக்கு சைவசித்தாத்தை ஆசங்கை அகல விளக்கியவர் சோமசுந்தர நாயகர். சைவசித்தாந்தச் சொற்பொழிவாளர், நூலாசிரியர் என பல தளங்களில் இயங்கித் தமிழ் மொழிக்கும், சைவசித்தாந்த மெய்யியலுக்கும் அரும்பணியாற்றிய சூளை.சோமசுந்த நாயகரின் வாழ்வையும், சைவசித்தாந்த மெய்யியல் பணிகளையும் ஆராயும் விதமாக இந்தக் கட்டுரை அமைகிறது.

**முக்கிய வார்த்தைகள்:** பத்தொன்பதாம் நூற்றாண்டு, சைவசித்தாந்தம், சூளை.சோமசுந்தர நாயகர், மறைமலையடிகள்

## அறிமுகம்

சைவசித்தாந்த மெய்யியல் கோட்பாடுகளுக்கு அடிப்படையாகத் திகழ்வன பன்னிரு திருமுறைகளாகும். பன்னிரு திருமுறைகள் முறையாகத் தொகுக்கப்பட்ட பின்பு சைவ சித்தாந்தத்தை ஒரு முழுமையான மெய்யியல் கோட்பாட்டின் அடிப்படையில் நிலை நிறுத்தியவர் மெய்கண்டார். மெய்கண்டார் எழுதிய நூல் சிவஞானபோதம் ஆகும். சைவசித்தாந்த மெய்யியல் நூல்களில் முதன்மையாகப் போற்றப்படும் நூலும் இதுவேயாகும். இதன் வழி நூலாக அமைவது மெய்கண்டாரின் முதன்மை மாணவரான அருணந்தி சிவாச்சாரியார் எழுதிய சிவஞான சித்தியார். சித்தியார் நூல் சுபக்கம், பரபக்கம் என இரண்டு பிரிவுகளைக் கொண்டது.

***Corresponding Author:** N Praburam

சுபக்கம் சைவசித்தாந்தத்தின் கோட்பாடுகளை விளக்குமுகமாகவும், பரபக்கம் பிற மெய்யியல் கோட்பாடுகளை சைவசித்தாந்தத்தோடு ஒப்பிட்டு மறுக்கும் முகமாகவும் அமைந்தது. பின்னாட்களில் சமயம் சார்ந்த வாத, எதிர்வாதங்களுக்கு முன்னோடியாகத் திகழும் நூல் சிவஞான சித்தியார் என்று கொள்ளலாம்.

சோழப்பேரரசின் செல்வாக்கைப் பெற்றிருந்த சைவம் பதிமூன்றாம் நூற்றாண்டுவரை பக்தி அடிப்படையில் சமணத்தையும், பௌத்தத்தையும் எதிர்த்து தன்னை நிலைநிறுத்திக்கொண்டது. சமணமும், பௌத்தமும் பெற்றிருந்த அளவு அரசச் செல்வாக்குப் பெற்றவைகளாக ஆதிசங்கரரின் மாயாவாதமும், வைணவமும் அக்காலத்தில் இல்லை. பதினான்காம் நூற்றாண்டிற்குப் பிறகு தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட விசயநகரப் பேரரசின் ஆட்சிக்குக் கீழ் தமிழகம் வந்தது. அதன்பின் வைணவமும், சங்கர மாயாவாதமும் அரசின் ஆதரவுபெற்ற சமயங்களாக மாறின. சைவசித்தாந்தத்திற்கு அரச செல்வாக்கில்லாமல் போனது. அந்தக் காலகட்டத்தில் சைவசித்தாந்தத்தை திருவாவடுதுறை, தருமபுரம் போன்ற சைவ ஆதீனங்கள் பாதுகாத்தன.

தமிழ்நாட்டில் ஆங்கிலேய காலனியாதிக்கம் உண்டான பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு அரச செல்வாக்கிழந்த வைணவமும், சங்கர மாயவாதமும் சைவசித்தாந்தத்துடன் ஒரேதளத்தில் இயங்க ஆரம்பித்தன. இந்தக் காலகட்டத்தில் அரசச் செல்வாக்குப் பெற்ற சமயமாக கிறித்துவம் உருவானது. கிறித்துவத்தால் உருவான மதமாற்றம் சைவத்திற்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தது. இதை எதிர்த்து இயக்கம் உருவாக்கி களமாடியவர் ஈழத்து ஆறுமுக நாவலர் ஆவார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வைதீகத்தை அடிப்படையாகக் கொண்ட சங்கரவேதாந்தத்தையும், வைணவத்தையும் எதிர்த்து ஆழ்ந்த சைவசித்தாந்த அறிவுடன் களமாடிய ஆளுமைதான் சூளை.சோமசுந்தர நாயகர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துமதம் என்னும் போர்வையில் வைதீகக் கொள்கைகளைப் பரப்பி வந்த வங்காளத்து விவேகானந்தருடன் சொற்போரிட்டு சைவசித்தாந்தத்தை நிலை நாட்டியது மட்டுமல்லாது ஜே.எம்.நல்லசாமிபிள்ளை, மறைமலையடிகள் போன்ற சைவசித்தாந்தப் பேராளுமைகளுக்கு ஆசிரியராகவும் விளங்கிய சூளை.சோமசுந்தர நாயகரின் சைவ பணிகளை ஆராயும் இக்கட்டுரை வரலாற்று ஆய்வுமுறை, மதிப்பீட்டு ஆய்வுமுறை ஆகிய ஆய்வியல் நெறிமுறைகளின் அடிப்படையில் அமைகிறது.

## இளமையும், கல்வியும்

சென்னையிலுள்ள சூளைப்பட்டாளம் என்னும் பகுதியில் 1846-ஆம் ஆண்டு ஆகத்து மாதம் ஆறாம் தேதி இராமலிங்க நாயகர், அம்மணியம்மாள் தம்பதியினருக்கு மூத்த மகனாகப் பிறந்தார் சோமசுந்தர நாயகர். சோமசுந்தர நாயகருக்குத் திருவேங்கடசாமி நாயகர், நாதமுனி நாயகர், வரதராச நாயகர் என்ற மூன்று தம்பிகளும், தாயாரம்மை என்னும் ஒரு தங்கையும் உண்டு. சோமசுந்தர நாயகரின் தாயார் வைணவத்தில் அதிக ஈடுபாடு கொண்டு விளங்கினமையால் இவர்களது குடும்பமும் வைணவ ஆசாரக் குடும்பமாகவே விளங்கியது. நாயகருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் அரங்கசாமி என்பதாகும். “அரங்கசாமியெனத் தாய்தந்தையர் இட்ட பெயரை இவருக்குப் பந்துவான அச்சுதானந்தரெனும் ஒரு சைவ சன்னியாசி மாற்றிச் சோமசுந்தரமென வரவழைத்துத் தாம் வளர்த்துச் சிவாதிக்யம் போதித்துச் சைவராக்கி வடமொழி, தென்மொழி கற்பித்து வந்தனர்” (தங்கவேலு முதலியார். நின்றை, ப.9). சென்னையிலுள்ள அரசினர் கல்லூரியில் பத்தாம் வகுப்பு வரை பயின்ற நாயகரவர்கள் தெலுங்கு மற்றும் ஆங்கில மொழிகளையும் செம்மையாகக் கற்றுத் தேர்ந்தார். “சென்னை இராசதானிக் கல்லூரியில் புதுமுக வகுப்பு வரையிற் பயின்றார்” (இராமசாமிப் புலவர் சு.அ, ப.47). தமிழ், தெலுங்கு, வடமொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளிலும் நுண்மான் நுழைபுலம் மிக்கவராய் நாயகர் விளங்கினார். “நாயகரவர்கள் இளமையாயிருந்த காலத்தில், அச்சிடப்பட்டு வழங்கிய நன்னூல், யாப்பருங்கலக்காரிகை முதலான தமிழ் இலக்கண நூல்களையும், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம் முதலான இலக்கிய நூல்களையும், திருக்குறள், நாலடியார் முதலான அறநூல்களையும், தேவாரம், திருவாசகம் முதலான பதினொரு திருமுறைகளையும், சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலான பதினான்கு சித்தாந்த நூல்களையும், ஒழிவிலொடுக்கம், வள்ளலார் சாத்திரம், திருப்போரூர் சன்னிதிமுறை முதலான பிற நூல்களையும் நன்கு கற்றிருந்தார்கள்” (மறைமலை அடிகள், ப.9). இவையல்லாது வடமொழி வேதங்கள், உபநிடதங்கள், புராண இதிகாசங்கள் முதலியவற்றில் நல்ல பயிற்சியும், ஆராய்ச்சியும் பெற்றிருந்தார்.

சோமசுந்தர நாயகர் தமது இருபத்தியெட்டாவது வயதில் சிவஞானம் அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். நாயகருக்கு ஜகதாம்பாள். விசாலாச்சி, லோகாம்பாள் என்ற மூன்று பெண் குழந்தைகளும், சிவபாதம் எனும் ஆண்

குழந்தையும் பிறந்தனர். நாயகர் தமது இளமைக்காலத்தில் சென்னை தோற்கிடங்கில் கணக்கராகவும், அதன்பின் சென்னை நகராண்மைக் கழகத்தில் எழுத்தராகவும் பணிபுரிந்தார் (மறைமலையடிகள், பக்.43,44). 1881-ஆம் ஆண்டு வரை நகராண்மைக் கழகத்தில் பணியாற்றினார் (Siddaanta deepika, Vol 4). திருவொற்றியூரில் நடந்த மகிழடித் திருவிழாவிற்குச் செல்லவேண்டி அரைநாள் விடுப்புக் கேட்ட பொழுது கழகத்தாரால் விடுப்பு மறுக்கப்படவே எழுத்தர் பணியைவிட்டு விலகிய நாயகர் அதன்பின் முழுமையாகத் தன்னை சைவப்பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டார்.

## நாயகரும், சைவசித்தாந்தமும்

சோமசுந்தர நாயகரின் குடும்பம் வைணவ நெறியைக் கடைப்பிடித் தொழுகும் குடும்பமாக இருப்பினும் இவரது உறவினரும், ஆசிரியருமான அச்சுதானந்தர் சங்கர வேதாந்தியாக, மாயாவாதத்தைப் பாடம்கூறும் ஆசிரியராக இருந்தார். அதன் காரணமாக நாயகரின் ஆரம்பநிலை சமயக் கல்வி மாயாவாதத்தைக் கற்றுக்கொள்ளும் விதமாகவே இருந்தது. அச்சுதானந்தர் மாயாவாதக் கருத்துக்களைப் பாடம் சொல்லுபவராக இருந்தாலும், அச்சுதானந்தரின் கருத்துகளுக்கும், சுமார்த்த பிராமணர்களின் மாயாவாதக் கருத்துகளுக்கும் பெரிய வேறுபாடுகள் இருந்தன. மாயாவாதத்தைக் கற்ற போதும் அஹம்பிரம்மாஸ்மி என்பதான நானே பிரமம் என்னும் மாயாவாதக் கொள்கையில் நாயகருக்கு உடன்பாடில்லை. அதுவே அவரின் மாயாவாத வெறுப்பிற்குக் காரணமாயிற்று. அச்சுதானந்தர் சிவ வழிபாடும், திருமால் வழிபாடுஞ் செய்பவராகவே இருந்தார். நாயகரும் ஆசிரியரின் வழிப்பட்டவராகவே விளங்கினார். "தம்மாசிரியர் அச்சுதனந்தர்பால் மாயாவாத நூல்களை இவர் பாடங்கேட்டு ஆராய்ந்து வருகையிலே அந்நூற் கொள்கைகள் பொருந்துமாறு யாங்ஙனம்? என வினவி அதற்கேற்ற விடை பெறாமையின், வரவர அதன்கண் அருவருப்புக் கொண்டு சைவ சமய நூல்களையே மிகுதியாய்ப் பயிலலானாரென்பதூஉம் புலனாகின்றது" (மறைமலையடிகள், ப.31).

மாயாவாதக் கொள்கையில் முரண்பட்ட நாயகர் தமது வினாக்களுக்கு சரியான விடை கூறும் பெரியாரைத் தேடிய காலத்தே மதுரைநாயகம்பிள்ளை என்னும் சைவ அடியாரின் அறிமுகத்தால் நாயகரின் ஆசங்கைகளும் நீங்கி, சிவஞானபோதம், சிவஞான சித்தியார் உள்ளிட்ட சைவசித்தாந்த சாத்திர நூல்களைக் கற்றுணரும் பேற்றினையும் பெற்றார். பின்னர் சித்தாந்த சாத்திர நூல்கள் அனைத்தையும் தெளிவாகக் கற்று சமய அறிவின்பால் தமக்குண்டான எல்லா சந்தேகங்களுக்கும் விடைகண்டு நிறைவடைந்தார். தாம் கற்றுணர்ந்தவைகளை எல்லாம் தம் ஆசிரியரிடம் எடுத்துரைத்தார். சைவசித்தாந்தக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட ஆசிரியர் அச்சுதானந்தர் தாமும் சைவராக மாறினார். ஆசிரியரை தன்பாலும், தாங்கொண்ட கொள்கைபாலும் ஈர்த்த பெருமை சோமசுந்தர நாயகருக்குண்டு.

## சைவசித்தாந்த சண்டமாருதம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தமிழ்நாட்டில் சைவம்,, வைணவம் மற்றும் சங்கர வேதாந்திகளிடையேயான கொள்கை மோதல்கள் உச்சத்தையடைந்திருந்தது. அச்சு ஊடகங்களின் வரவினால் கருத்து மோதல்கள் நூல்களாகவும், துண்டுப் பிரசுரங்களாகவும் தொடர்ந்து வெளியாயின. ஒருகருத்துக்கு எதிர்கருத்துகளும், அதற்கான விளக்கங்களும், கண்டனங்களும், கண்டனங்களுக்குக் கண்டனம் எனச் சமயக் கருத்து மோதல்கள் ஒரு புதிய உச்சத்தை அடைந்தது. "தமிழ்நாட்டில் கண்டண அணிக்குத் தலைமையேற்றவர் சோமசுந்தர நாயகர் ஆவார். அவரைப் பரசமயக் கோளரி என்றே அழைத்தனர். தமிழ்நாட்டில் பெரும்பான்மை வாதங்கள் அவராலும், அவர்தம் சீடர்களாலும் நிகழ்ந்தன. இதனால் நீதிமன்ற வழக்குகளைக்கூட சந்திக்க நேர்ந்தத்து" (இராஜசேகரன்.இரா, ப.30).

சொற்பொழிவாற்றுவதில் தலைசிறந்தவரான நாயகர் சைவசித்தாந்தக் கருத்துகளைப் பொதுமக்களிடமும், அறிவார்ந்த பெருமக்களிடமும் கொண்டு சேர்ப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். தமிழ்நாட்டில் சோமசுந்தர நாயகர் சொற்பொழிவாற்றாத சிவத்தலங்களே இல்லையென்று கூறலாம். சொற்பொழிவோடு மட்டுமல்லாது எதிர் சமயத்தாரோடு சொற்போர் புரிந்து அவர்களின் கருத்துகளை மறுத்து அவர்களைத் தோல்வி அடையச் செய்வதிலும் நாயகர் வல்லவராகத் திகழ்ந்தார். இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியின் அவைக்களத்தே ஒரு சங்கர வேதாந்தியுடன் நடைபெற்ற சொற்சமரில் சைவசித்தாந்தத்தின் அடிப்படை என்ன என்று மாயாவாதி கேட்க நாயகர் இறை, உயிர், தளை எனும் முப்பொருள் உண்மைகளை விளக்கினார். அதை மறுத்த வேதாந்தி கேவலாத்துவித பிரம்மமே பெரியது மற்றவையெல்லாம் அவற்றின் பிம்பங்கள் என்ற வாதத்தை முன் வைத்தார். அதை மறுத்த நாயகர் பெரியது ஒன்று உள்ளதென்றால் சிறியது ஒன்றும் இருக்கும், இவையிரண்டும் இருக்க ஒரு இடம் வேண்டும் அதுதான் இயற்கை என்று பதில் அளித்து பெரியது சிவம்,

சிறியது உயிர், இடம் என்பது மாயை என்னும் உலகம் என்று விளக்கினார். எதிர்வாதம் புரிய இயலாத மாயாவாதி தன் தோல்வியை ஒப்புக்கொண்டார். 'கலைக் கடலாக வாழ்ந்த சென்னை சூளை புலவர் சோமசுந்தர நாயகருக்கு தங்கத்திலான தோடாவை வழங்கி சைவசித்தாந்த சண்டமாருதம் என்ற விருதையும் மன்னர் அவருக்கு அளித்தார்' (கமால் எஸ்.எம், ப.61).

## நூலாசிரியர்

சோமசுந்தர நாயகர் மிகச்சிறந்த நூலாசிரியராகவும் விளங்கினார். நாயகர் தமது இருபத்தியிரண்டாம் வயதில் முதல் நூலை எழுதினார். வேதபாஹ்ய சமாஜ கண்டனம் என்பதே அந்நூல். நாயகரவர்கள் தாம் இயற்றிய நூல்களைத் தமது பெயராலுந் தம்நண்பர் மாணாக்கர் பெயராலுந் தாம் வெளியிடும் வழக்கத்தைத் தமது ஆசாரிய பிரபாவம் நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்கள் (மறைமலையடிகள், ப.57). நாயகரின் நூல்கள் அதிகமான வடசொற்கள் கலந்த மணிப்பிரவாள நடையில் இருக்கும். நூற்றுக்கும் மேலான நூல்களை எழுதிய நாயகரின் நூல்கள் சிலவற்றை இங்கே காணலாம்.

1. வேதபாஹ்ய சமாஜ கண்டனம்
2. ஆசாரிய பிரபாவம்
3. சிவத்தியானாஷ்டகம்
4. தேவித்தியான நவகம்
5. ஷண்முகத்தியான பஞ்சகம்
6. திருக்கண்ணப்பர் பிரபாவம்
7. ஆளுடைப்பிள்ளையார் வெண்பா அந்தாதி
8. குருத்தியான பஞ்சகம்
9. குருமான்மிய அகவல் & சாற்றுக்கவி
10. சித்தாந்தவுந்தியார்
11. உத்தமவாத துலவாதுலம்
12. தணிகாசல ஸ்தவம்
13. சிவ நாமாவளி
14. விநாயகப் பிரபாவ தீபிகை
15. ஞானசம்பந்த பரத்துவ நிரூபணம்
16. ஆதிசைவப் பிரபாவம்
17. சித்தாந்த ரத்னாகரம்
18. சித்தாந்த சேகரம்
19. சிவபாரம்பர்யப் பிரதாரிசிநி
20. சிவவாக்கியத் தெளிவுரை
21. சமரச ஞானதீபம்
22. சைவசித்தாந்த பூஷணம் ஸ்ரீ சேக்கிழார் திருவாக்குண்மை
23. பிரஹ்மானுபூதி
24. 24 பாரதாற்பாரிய சங்கிரகம்.
25. சுக்லாம்பரதர சுலோக விசாரம்
26. சிவதத்வ சிந்தாமணி
27. அர்ச்சாதீபம்
28. சித்தாந்த பூஷணம்
29. சிவாதிக்ய ரத்நாவளி
30. ஆபாச ஞான நிரோதம்
31. குதர்க்கவாத விபஞ்சிநி
32. இராமதத்வ தீபிகையினது ஆபாச விளக்கம் (இரண்டு பாகங்கள்)
33. துர்வாத நிக்ரஹம்
34. பரமத பங்க வினாவிடை
35. ஞான சதுஷ்ட தர்ப்பணம்

## முடிவுரை

போற்றுதலுக்குரிய மொழிபெயர்ப்பு அறிஞர் ஜே.எம்.நல்லசாமிபிள்ளை, தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள், தமிழ்த்தென்றல் திரு.வி.க, தமிழறிஞர்கள் நல்.சுப்பிரமணியபிள்ளை, ந.கதிரவேற்பிள்ளை போன்ற தமிழ் பேரறிஞர்களுக்கெல்லாம் சைவசித்தாந்த ஆசிரியராகத் திகழ்ந்த சோமசுந்தர நாயகரின் வாழ்வையும், சைவப்பணியையும் இக்கட்டுரை ஆய்ந்தது. சற்றேறத்தாழ முப்பதைந்தாண்டு காலம் சைவப்பணியாற்றிய சைவசித்தாந்த மார்த்தாண்டர் ஸ்ரீலஸ்ரீ சூளை.சோமசுந்தர நாயகர் 1901-ஆம் ஆண்டு பிப்ருவரி மாதம் 22-ஆம் தேதி சிவப்பேறடைந்தார். நாயகரின் மறைவிற்குப் பிறகு அவருக்கு பலர் இரங்கற்பா பாடி நாயகரைச் சிறப்பித்தனர். அதில் பூவை.கலியாணசுந்தரமுதலியாரின் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரநாயகரவர்கள் விஜயாஷ்டகம், பண்டிதர் எஸ்.சரவணபிள்ளையின் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரநாயகரவர்கள் சிவபதப்பேறு, மறைமலையடிகளின் கையறுநிலை, சோமசுந்தரக்காஞ்சி ஆகியவை குறிப்பிடத்தக்கன. வைணமும், மாயாவாதமும் கோலோச்சிய பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவர்களோடு சொற்போர் புரிந்து சைவசித்தாந்தத்தை நிலைநாட்டிய நாயகரின் பணி போற்றுதலுக்குரியது. நூற்றுக்கும் மேலான நூல்களை நாயகர் இயற்றியிருந்தாலும் சில நூல்கள் அச்சேறமலும், பல நூல்கள் மறுபதிப்புப் பெறாமலும் போனதால் அந்நூல்கள் தற்காலம் கிடைக்கப்பெறவில்லை. நாயகரின் சமகால ஆளுமைகளால் குறிப்பிடப்பட்ட மற்றும் இப்போதும் பதிப்பில் உள்ள நூல்கள் மட்டும் இக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு கடினமான காலகட்டத்தில் சைவசித்தாந்த நெறியைத் தமிழ்நாட்டில் நிலைநாட்டிய சூளை.சோமசுந்தர நாயகரின் புகழ் இம்மண்ணுலகம் மன்னும் வரை நிலைபெறுவதாக.

## குறிப்புகள்


1. கமால்.எஸ்.எம். மன்னர் பாஸ்கர சேதுபதி
2. ஷர்மிளா பதிப்பகம் 21,ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்-623501, வெளியீடு-March 1992.

3. தங்கவேலு முதலியார்.நின்றை சோமசுந்தர நாயகர் சரித்திரச் சுருக்கம் சைவம் இதழ் (ஜனவரி 1919), சைவ மஹா சபையின் மாதாந்திரப் பத்திரிக்கை.
4. மறைமலையடிகள் சோமசுந்தர நாயகர் வரவாறு திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி, சென்னை-1. வெளியீடு-1957.
5. இராமசாமிப் புலவர் சு.அ. தமிழ்ப்புலவர் வரிசை (எட்டாம் புத்தகம்) திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி, சென்னை-1.வெளியீடு-Aug 1955.
6. இராஜசேகரன்.இரா. சைவத் தோரணங்கள் பத்தினிக் கோட்டப் பதிப்பகம், 4/149, மேலத்தெரு, மேலையூர், பூம்புகார்-609107. வெளியீடு-Aug 2008.
7. Nallasami Pillai J.M. Siddhantha Dheepika or the light of truth, 4.